**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 ஆம் நாள் சனிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், கார்த்திகைத்திங்கள் 20ம் நாள்

**இ.ம.எண். 8/2025**

**in**

**அ.வ.எண். 113/2016**

1. பாக்கியம்
2. சக்திவேல் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. ஞானசௌந்தரி
2. மாவட்ட ஆட்சியர், திருப்பூர்
3. வட்டாட்சியர், காங்கயம் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 27.11.2025ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.K.தங்கராஜ், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி, B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள் சாட்சியத்தில் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14(1) மற்றும் பிரிவு 151ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

i) அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் மீது 1, 2 மனுதாரர்கள் தான் இறந்துபோன தெய்வசிகாமணி கவுண்டரின் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை செய்யக்கோரியும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா முதல் விசாரணையின்போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 28 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்பு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு இரு தரப்பு விசாரணையும் முடிந்த பின்பு Arguments–க்காக வாய்தா ஏற்பட்டு 15.10.2024ம் தேதியன்று வாதிகள் தரப்பில் Arguments–ம் செய்து முடிக்கப்பட்டது. பின்பு 1ம் பிரதிவாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் சாட்சிய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு விசாரணையின் சாட்சிகளையும் ஆவணங்களையும் எதிர்த்து மறுப்பாக மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு Rebuttal Evidence ஆக ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

ii) இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் கால தாமதமாகிவிட்டது. மேற்படி காலதாமதம் வேண்டுமென்றோ, அஜாக்கிரதையாகவோ ஏற்பட்டதல்ல. எனவே இம்மனுவுடன் ஒப்படைத்துள்ள ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியத்தில் ஏற்றுக்கொள்ள அனுமதியளிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியத்தில் ஏற்றுக்கொள்ளாவிட்டால் மனுதாரர்களுக்கு பொருளால் ஈடு செய்யமுடியாத இழப்பு ஏற்படும். எனவே இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள் சாட்சியத்தில் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**<u>2) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

i) மனுதாரர்கள் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிருரையில் இவ்வெதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரரர்களே கண்டிப்பாக நிரூபணம் வேண்டியது.

ii) மனுதாரரும் மனுதாரரின் தாயரான 1ம் மனுதாரரும் இறந்துபோன மனுதாரரின் தகப்பனாரான லேட்.தெய்வசிகாமணிகவுண்டர் என்பவரின் சட்டப்படியான வாரிசுகள் என அறிவிக்க கோரி விளம்புகைக்கும், அதன் அடிப்படையில் வாரிசு சான்றிதழும் வழங்கவேண்டும் என கேட்டு

செயலுறுத்துக்கட்டளைக்கும் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா முதல் விசாரணையின்போது மனுதாரர்கள் தரப்பில் 28 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாகவும், அதன்பின்பு எதிர்மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு இருதரப்பு விசாரணையும் முடிந்த பின்பு Arguments க்காக வாய்தா ஏற்பட்டு 15.10.2024 தேதியன்று வாதிகள் தரப்பில் Arguments ம் செய்து முடிக்கப்பட்டு அதன் பின்பு 1ம் பிரதிவாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு DW1 மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் சாட்சிய பிராமண வாக்குமூலம் தாக்கல் செய்து கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

iii) மேற்படி வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பு விசாரணையின் சாட்சிகளையும் ஆவணங்களையும் எதிர்த்து மறுப்பாக மனுதாரர்கள் தரப்பில் Rebuttal Evidence ஆக தாக்கல் செய்துள்ள 17 ஆவணங்களையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு அவசியமான ஆவணங்கள் என்பதும் உண்மையல்ல. வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்களை தாக்கல் செய்திருப்பது ஏற்கதக்கதல்ல. மேற்படி 17 ஆவணங்களை தாவா முதல் விசாரணையின்போது தாக்கல் செய்ய முடியவில்லை என்பதும் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்ய PW–1 ஐ ரீகால் செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்திருப்பது எந்த வகையிலும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் கடந்த 2016ம் வருடம் வழக்கு தாக்கல் செய்துவிட்டு வாதுரை முடிக்கப்பட்ட பின்னர் 1ம் எதிர்மனுதாரரின் சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு அதிலுள்ள குறைபாடுகளை கண்டுபிடித்து அதற்கு தகுந்தாற்போல் ஆவணங்களை தாக்கல் செய்திருப்பதால் மேற்படி மனுவை

தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டும் என்பதே 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் பலமுறை வாய்ப்பளித்தும் எதிருரை தாக்கல் செய்யப்படாததால் 2, 3 எதிர்மனுதாரர்கள் இம்மனுவில் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

5. தீர்வு:–

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு விசாரணையின் சாட்சிகளையும் ஆவணங்களையும் எதிர்த்து மறுப்பாக மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு Rebuttal Evidence ஆக ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் கால தாமதமாகிவிட்டது என்றும் எனவே இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள் சாட்சியத்தில் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்களை தாக்கல் செய்திருப்பது ஏற்கதக்கதல்ல என்றும் மேற்படி 17 ஆவணங்களை தாவா முதல் விசாரணையின்போது தாக்கல் செய்ய

முடியவில்லை என்பதும் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க வேண்டியும் இம்மனுவை தாக்கல் செய்திருப்பது எந்த வகையிலும் செல்லத்தக்கதல்ல என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது வாதிகள் தான் கடந்த 10.10.2013 ம் தேதியன்று இறந்துபோன தெய்வசிகாமணி கவுண்டரின் வாரிசுகள் என விளம்புகை செய்ய வேண்டும்படிக்கும், வாதிகளுக்கு 2 மற்றும் 3 பிரதிவாதிகள் வாரிசு சான்றிதழ் வழங்க வேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 21.10.2016 அன்று 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 07.11.2016 அன்று 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு அன்றைய தினம் அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது. பின்னிட்டு கடந்த 03.07.2017 அன்று வாதிகள் தரப்பில் விசாரணைக்கு ஆஜராகாததால் அசல் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு, 23.10.2018 தேதியில் இ.ம.எண்.692/2017 மனுவின் உத்தரவின் அடிப்படையில் அசல் வழக்கானது மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

7. பின்னிட்டு கடந்த 17.12.2021 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.28 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 23.09.2022 அன்று வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, கடந்த 19.07.2023 அன்று பி.சா.1 விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த

03.11.2023 அன்று பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, பி.வா.சா.1 சாட்சியை மீண்டும் ரீகால் செய்து ஆவணங்கள் குறியீடு செய்ய அனுமதி கோரி இ.ம.எண்.3/2025 முதல் இ.ம.எண்.4/2025 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுக்கள் கடந்த 26.08.2025 அன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில் பி.வா.சா.1 மீண்டும் விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 12.09.2025 அன்று பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு அசல் வழக்கானது வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 19.09.2025 அன்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள் சாட்சியத்தில் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் மனுதாரர்கள் கடந்த 2016ம் வருடம் வழக்கு தாக்கல் செய்துவிட்டு வாதுரை முடிக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரரின் சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு அதிலுள்ள குறைபாடுகளை கண்டுபிடித்து அதற்கு தகுந்தாற்போல் ஆவணங்களை தாக்கல் செய்திருப்பதால் மேற்படி மனுவை தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது இறந்துபோன தெய்வசிகாமணி கவுண்டர் என்பவருக்கு மனுதாரர்கள்/வாதிகள் தான் வாரிசுகள் என்று விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தங்களது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குவது நீதியின் பால் சிறந்தது

என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் மனுதாரர்கள் இம்மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் 1ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும் வா.சா.1 தரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை குறித்து வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய 1ம் எதிர்மனுதாரருக்கு போதிய வாய்ப்பும் வசதியும் உள்ளது என்பதாலும் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதினாலும் மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்ய போதிய வாய்ப்புகள் வழங்கியும் அசல் வழக்கானது வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனுவில் கண்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மிகவும் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் 1ம் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் கால விரயத்தை கருத்திற்கொண்டு இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்கள்/வாதிகள் கூட்டாகவும், தனித்தனியாகவும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)

செலவு தொகையாக வரும் 18.12.2025 ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 18.12.2025.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/– திருமதி.கே.எஸ்.மாலதி
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :– இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :– இல்லை

ஒம்/– திருமதி.கே.எஸ்.மாலதி
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.